செ.வெ.எண்:02 நாள்:01.11.2017

**நாகப்பட்டினம் மாவட்டம்**

**பள்ளிவாசல், தர்காக்கள், மதரஸாகளில் பணிப்புரிவோர் அரசு நலத்திட்ட உதவிகளை பெற, உலமா அடையாள அட்டைகளை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் கட்டணமின்றி பெற்றுக்கொள்ளலாம் - மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார், இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

தமிழ்நாடு அரசின் சிறுபான்மையினர் நலத்துறை மூலம், உலமாக்கள் மற்றும் இதர பணியாளர்கள் நலவாரியம் என்ற அமைப்பு இயங்கி வருகிறது. இதன் மூலம் பள்ளிவாசல் தர்கா, மதரஸாகளில் பணிப்புரியும் 18 வயது முதல் 60 வயது வரை உள்ளவர்களுக்கு இவ்வாரியத்தில் உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டு உலமா அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகிறது.

உறுப்பினர்களில் அடையாள அட்டை பெறுவதற்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கி வரும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் கட்டணமின்றி பெற்றுக்கொள்ளலாம்.

இவ்வாரியத்தில், பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை, கருச்சிதைவு உதவித்தொகை, இயற்கை மரணம் உதவித்தொகை, ஈமச்சடங்கு உதவித்தொகை, விபத்து நிவாரணம், மூக்கு கண்ணாடி ஈடுசெய்ய உதவித்தொகை மற்றும் முதியோர் ஓய்வூதியம் நலத்திட்ட உதவிகளை பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம். உறுப்பினர்களின் பதிவை 3 ஆண்டுகள் நிறைவு அடைந்தவுடன் மீண்டும் புதுப்பித்தல் செய்தல் வேண்டும்.

உறுப்பினரின் பதிவை புதுப்பித்தலுக்கு 11.11.2017 அன்று மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரின் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சிறப்பு முகாம் நடைபெற உள்ளது. அவ்வமையம் இவ்வாரியத்தில் உறுப்பினர்கள் பதிவை உரிய காலத்தின் புதுப்பிக்க தவறியவர்களுக்கு இது ஒரு வாய்ப்பாக அமையும் என்று நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார், இ.ஆ.ப., தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்**